<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 43/2009

| | |
|---|---|
| Deposition of Witness | : DW 2 |
| Name | : முணிரத்தினம் (வயது – 70) |
| Father's Name /W/o | : த/பெ பட்டாபி |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : மேல்பாக்கம் |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 31.10.2025.

## <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. 02.05.1985 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் குப்பையா மனைவி சரசம்மாளுக்கு பத்தில் ஒரு பாகம் பிரித்து சேர்த்து தான் பாகப்பிரிவினை நடந்ததா என்றால் சரிதான். 1985 ஆண்டில் பாகப்பிரவினை பத்திரம் யார் யார் எழுதினார்கள் என்றால் முனியம்மாள், சரசம்மாள், நாகரத்தினம்மாள், ஜீவரத்தினம்மாள், ஜோதிரத்தினம்மாள், கஜேந்திரம்மாள். மேற்படி அவர்களுக்கு எவ்வளவு பாகத்தை ஒதுக்கினார்கள் என்றால் தெரியாது.

2. அருணாச்சலம் தேவர் யார் என்றால் என் மாமா ஆவார். மேற்படி அருணாச்சலமிடருந்து சொத்து வாங்கியதாக பி.சா.ஆ – 3 தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மேற்படி சொத்தை எந்த தேதியில் வாங்கினேன் என்றால் 1990 ஆண்டில் வாங்கினேன். தேதி மாதம் தெரியவில்லை. அருணாச்சலமிடருந்து எவ்வளவு அளவு சொத்து வாங்கினேன் என்றால் 39 செண்ட் வாங்கினேன்.

3. மேற்படி 39 செண்ட் சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 136 ஆகும். மேற்படி 39 செண்ட் 10 இல் ஒரு பாகம் கிரையம் வாங்கினேனா என்றால் சரிதான். மேற்படி 10 இல் ஒரு பாகத்தை எனடக்கு ஒரு பாகம் வேண்டும் என்று பாகப்பிரிவினை செய்தேனா என்றால் இல்லை.அருணாச்சலம் தேவருக்கு சொத்து எப்படி வந்தது என்றால் சரசம்மாள் உயில் எழுதி வைத்தார்கள். எப்போது உயில் எழுதி வைத்தார்கள் என்றால் 1989 ஆண்டில் எழுதி வைத்தார்கள்.

4. 1989 ஆம் ஆண்டு உயில் நகலை வாங்கி பார்த்தேனா என்றால் என்னிடம் உள்ளது. மேற்படி உயிலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது தனி சொத்து. பி.சா.ஆ – 4 இல் நாகரத்தினம்மாள் இடமிருந்து கிரையம் பெற்றேன் என்று தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எந்த வருடத்தில் கிரையம் பெற்றேன் என்றால் 2010 ஆம் ஆண்டில் கிரையம் பெற்றேன்.

5. மேற்படி நாகரத்தினம்மாளுக்கு சொத்து எவ்வாறு வந்து என்றால் பாகப்பிரிவினை மூலம் வந்தது. நாகரத்தினம்மாள் எப்போது பாகப்பிரிவினை செய்தார் என்றால் 1985 ஆம் ஆண்டில் பாகப்பிரிவினை செய்தார். பாகப்பிரிவினை பத்திரத்தில் நாகரத்தினம்மாளுக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் 87 செண்ட் ஒதுக்கப்பட்டது. மேற்படி 87 செண்டின் சர்வே எண் என்னவென்றால் 136 ஆகும். 1985 ஆண்டு பாகப்பிரிவினை பத்திர்ம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. பி.சா.ஆ – 3, பி.சா.ஆ – 4 பத்திரத்தின் அசல் எங்கே என்றால் அசல் பத்திரம் என்னிடம் கொடுக்கவில்லை. நான் அவர்களிடம் அசல் பத்திர்ம் கேட்டேனா என்றால் கேட்டேன் ஜோதிரத்தினம்மாளிடம் உள்ளது என்று என்னிடம் கொடுக்கவில்லை. நான் வாங்கிய சொத்திற்கும் ஜோதிரத்தினம்மாளிடம் எப்படி வந்தது என்றால் அவர் தந்தை இறந்த பிறகு மொத்த பத்திரமும ஜோதிரத்தினம்மாள் வைத்துக்கொண்டார். மேற்படி அசல் பத்திரத்தை ஜோதிரத்தினம்மாள் கொடுக்கவேண்டும் என்று அறிவிப்பு

அனுப்பினேனா என்றால் இல்லை.

7. காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. அசல் பத்திரம் ஜோதிரத்தினம்மாள் எடுத்து கொண்டார் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தை ஜோதிரத்தினம்மாள் எந்த வருடத்தில் எடுத்துக்கொண்டார் என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 3, பி.சா.ஆ – 4 வழக்கிற்கு பின்னிட்டு 2025 ஆம் ஆண்டில் தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நகல் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 1990,2010 ஆகிய ஆண்டுகளில் வாங்கிய சொத்திற்கு பட்டா மாற்றம் செய்ய மனு அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன்.

8. மேற்படி மனு நகல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 6 அசல் வழக்கு 103/1995 என்ற வழக்கில் ஜோதிரத்தினம்மாள் என்பவர் நாகரத்திரனம்மாள் வகையறாக்கள் பெயரில் தாக்கல் செய்திருந்த வழக்கின் தீர்ப்புரையில் பக்கம் 9 இல் இந்நீதிமன்றத்தில் 02.05.1985 தேதியில் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை.

9. மேற்படி தீர்ப்புரையில் சரசம்மாள் எழுதி வைத்த உயில் செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் மேற்படி தீர்ப்புக்கு பிறகு தான் நான் சொத்து வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 7 ஜோதிரத்தினம்மாள் அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண்.23/2015 தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதில் 12.02.2019 தேதியில் ஜோதிரத்தினம்மாள் என்பவருக்கு 10 இல் 2 பாகம் உரிமை உள்ளது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் நான் தாக்கல் செய்யவில்லை.

10. மேற்படி மேல்முறையீடு வழக்கு எண்.23/2015 தீர்ப்பின் படி நிறைவேற்று மனு 24/2020 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றாலும் அதன் படி சர்வே எண்.136/2, 136/7, 137/8, 136/8, 136/10 ஆகிய சர்வே

எண்களில் 0.80 செண்ட் நிலத்தை நீதிமன்ற அமீனா மூலம் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சாட்சிகள் முன்னிலையில் 11.05.2022 தேதியில் சுவாதீனம் எடுக்கப்பட்டது என்றால் தெரியாது.

11. மேற்படி சுவாதீனபடி ஜோதிரத்தினம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் பெயரில் உள்ள பட்டா நான் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். எவ்வளவு சொத்திற்கு பட்டா வாங்கியுள்ளேன் என்றால் 39 செண்ட்க்கு பட்டா உள்ளது. மேற்படி பட்டா எந்த வருடம் வாங்கினேன் என்றால் 1991 ஆண்டில் வாங்கினேன். 1991 ஆம் ஆண்டில் வாங்கப்பட்ட பட்டாவை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

12. சர்வே எண்கள் 136/2ஏ இல் 17 செண்ட் ,131/3 இல் 0.19 செண்ட், 136/5 இல் 12 செண்ட் என் அனுபவத்தில் உள்ளது என்று நான் தெரிவித்துள்ளதற்கு சிட்டா,அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கேட்டு வாங்க வேண்டும். நான் மேற்படி சர்வே எண்களின் அனுபவத்தில் உள்ளேன் என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்துக்கள் முதன் முதலில் குப்பையா தேவருக்கு சொந்தம் என்றால் சரிதான்.

13. குப்பையா தேவரின் 2 ஆம் மனைவி சரசம்மாள் சோளிங்கர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சோளிங்கர் நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு ஆனது என்று அவர்களின் வாரிசுகளுக்குதெரியுமா என்றால் தெரியும். நாகரத்தினம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1 பெண் பிள்ளை. என் முதல் மனைவி பெயர் என்னவென்றால் ராணி. அவர் உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். நாகரத்தினம்மாளின் பெண் பிள்ளை பெயர் என்னவென்றால் தாட்சாயணி. தாட்சாயணி என்பவரை தான் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேனா என்றால் சரிதான்.

14. சரசம்மாளுக்கு 10 இல் ஒரு பாகம் சொத்து ஒதுக்கப்படடது என்று நான் தெரிவித்துள்ளேன் என்றாலும் மேற்படி பாகம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 136 ஆகும். நான் மோசடியாக வழக்கு நிலுவையில் இருந்த போதே மோசடியாக நான் கிரையம் வாங்கினேன் என்றால் எனக்கு நோட்டீஸ் அனுப்பவில்லை. நாகரத்தினம்மாளுக்கு ஏற்கனவே நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை அனுப்பட்டு வழக்கு நடந்தது என்றால் நாகரத்தினம்மாளுக்கு அழைப்பணை வரவில்லை.

15. மேற்படி அழைப்பாணை வரவில்லை என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா அல்லது நாகரத்தினம்மாள் சொல்லி தெரியுமா என்றால் நேரடியாக தெரியும். நாகரத்தினம்மாள் இந்த வழக்கில் வழக்கறிஞர் வைத்து வழக்காடியுள்ளார் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் வழக்கை நடத்தவில்லை. 1985 பாகப்பிரிவினை பத்திரத்தில் சர்வே எண்.136 இல் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. சர்வே எண்.136/2ஏ கிணறு மற்றும் கிணற்றுமேடு உள்ளது அது எத்தனை பேருக்கு பாகம் என்றால் 5 பாகம்.

16. மேற்படி 5 பாகம் இருக்கும் போது என்னால் முழு பாகத்தையும் உரிமை கோர முடியாது என்றால் எனக்கு 1 பாகத்தில் உரிமை உள்ளது. நாகரத்தினம்மாளுக்கு பிறகு அவர் சொத்து யாருக்கு வரும் என்றால் அவர் மகளுக்கு தான் வரும். அவ்வாறு இருக்கும் போது நான் கிரையம் வாங்க வேண்டிய அவசியம் என்ன என்றால் அவர் வேறு நபருக்கு விற்பனை செய்ய முயற்சி செய்தார் அதனால் நான் பணம் கொடுத்து கிரையம் வாங்கினேன்.

17. குப்பையா தேவரின் மற்ற வாரிசுகள் வழக்கை நடத்தினார்களா என்றால் இல்லை. குப்பபையா தேவரின் வாரிசுகள் வழக்கு நடத்தி தீர்ப்பாகிவிட்டது நான் மோசடியாக கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல. ஜோதிரத்தினம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் 2 பாகம் நீதிமன்றத்தின் மூலம் சுவாதீனம் எடுக்கப்பட்டு அவர் சுவாதீனத்தில் இருந்து வருவது எனக்கு நேரடியாக தெரியும் என்றால் ஞாபகமில்லை. எனவே வாதி கோரியுள்ள பரிகாரங்கள் செலவு தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**(3 மற்றும்  4 பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**